**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.**

**MC.No. 6/ 2023**

**PW-1**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் நாள் வெள்ளிக் கிழமை மனுதாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 19.09.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பிரியபாலா | **தொழில்** | : | வீட்டுக்குடித்தனம் |
| **த /பெ.** | : | சக்கரவர்த்தி | **வசிப்பிடம்** | : | வடலூர் |
| **வயது** | : | 46 | **வட்டம்** | : | குறிஞ்சிப்பாடி |

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| **ம.சா.ஆ.1** | 2005 - 2009 க்கான மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் குடும்ப அட்டையின் நகல் |
| **ம.சா.ஆ.2** | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). |
| **ம.சா.ஆ.3** | எதிர்மனுதாரர் மாண்பமை நெய்வேலி சார்பு நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக விவகாரத்து கோரி தாக்கல் செய்திருந்த |

| | |
|---|---|
| | HMOP.54/2019 மனுவின் நகல் |
| **ம.சா.ஆ.4** | மேற்படி HMOP.54/2019 மனுவிற்கு மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் நகல் |
| **ம.சா.ஆ.5** | மனுதாரர் மாண்பமை நெய்வேலி சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரதை சேர்த்து வைக்கக்கோரி தாக்கல் செய்திருந்த HMOP.56/2019 மனுவின் நகல் |
| **ம.சா.ஆ.6** | மேற்படி HMOP.56/2019 மனுவிற்கு எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த எதிருரையின் நகல் |
| **ம.சா.ஆ.7** | மனுதாரர் மாண்பமை நெய்வேலி சார்பு நீதிமன்ற HMOP.54/2019 வழக்கில் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு எண். 9/2021 ன் நகல் |
| **ம.சா.ஆ.8** | மேற்படி இடைக்கால மனு எண். 9/2021 க்கு எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த எதிருரை நகல் |
| **ம.சா.ஆ.9** | மனுதாரர் மாண்பமை நெய்வேலி சார்பு நீதிமன்ற HMOP.54/2019 வழக்கில் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு எண். 9/2021 ல் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் நகல் |
| **ம.சா.ஆ.10** | மனுதாரர் மாண்பமை நெய்வேலி சார்பு நீதிமன்ற HMOP.54/2019 வழக்கில் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு எண். 9/2021 ல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் நகல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

**(எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது.)**